**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC. 100/2016 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.1 |
| Name : | திருமதி. ஜெயசீலி |
| Father's Name/Husband Name: | திரு. முத்துசாமி |
| Village : | வெண்கலம் |
| Taluk : | வேப்பந்தட்டை |
| Age : | 60 / 2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 07.08.2025.

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. B. ஆனந்தன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( 1, 4 எதிரிகள் ஆஜர் இல்லை அவருக்காக கு.வி.மு.ச.317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை**

1(i) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். ப.சா. 2 முத்துசாமி எனது கணவர். எதிரிகள் சத்யா, செல்வம், தீபக் மற்றும் பாலம்மாள் ஆகியோர்களை தெரியும். எதிரி செல்வம் மற்றும் தீபக் தற்போது உயிருடன் இல்லை. சம்பவத்திற்கு முன்பாக எங்களுக்கும் எதிரிகளுக்கும் இடையே சாக்கடை பிரச்சனை இருந்து வந்தது. சுமார் 12 வருடத்திற்கு முன்பு இரவு சுமார் 10.30 மணியளவில் நான் என் வீட்டில் இருந்தபோது எங்கள் வீட்டில் நாங்கள் சாப்பிட்டுக் கொண்டிருந்தோம் எங்கள் வீட்டிற்கு முன்பு உள்ள சாக்கடையை எதிரி சத்தியா வேகவேகமாக கூட்டித் தள்ளினார். சாக்கடைத் தண்ணீர் சாப்பாட்டில் விழுகிறதே ஏன் இப்படி செய்கிறாய் என்று நான் கேட்டபோது இது தான் தேவிடியா உனக்கு பிரச்சனையா என்று சத்யா பேசிக்கொண்டிருந்தபோது சத்யாவின் கணவர் செல்வம் வந்து உனக்கு எப்ப பார்த்தாலும் என் மனைவியிடம் சண்டையா என்று சொல்லி

குத்துக் கோலால் என் தொண்டையில் குத்திவிட்டார். எதிரி சத்யா என்னடி கத்துற என்று சொல்லி கல்லால் இடது காலில் குத்தினார். எதிரி சத்யா இன்னைக்கு தப்பிச்சிட்ட எப்ப இருந்தாலும் குத்துக்கோலால் உன்ன கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டினார். என்னை பாலம்மாள் என்னை தேவிடியா ஊர மேஞ்சவ உனக்கு எதுக்குடி இருக்குற இல்லாம போயிருக்கலாம் என்று சொல்லி திட்டினார். பெரம்பலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை அளிக்க முடியாது என்று சொல்லிவிட்டதால் என்னை திருச்சி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றனர். போலிசார் சம்பவம் சம்மந்தமாக விசாரித்து எழுதிக்கொண்டார்கள். அவ்வாறு எழுதியதில் கைரேகை வைத்தேன். அந்த **புகார் வாக்குமூலம் அ.த.சா.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. என்னை குத்த பயன்படுத்திய குத்துக்கோலை பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியும். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதி மற்றும் மாதம் குறிப்பிட்டு என்னால் சொல்லமுடியாது என்றால் சரிதான். நான் கொடுத்த புகார் வாக்குமூலத்தில் என்ன எழுதியிருந்தார்கள் என்ற குறிப்பிட்டு என்னால் சொல்லமுடியுமா என்றால் நான் சொல்ல சொல்ல அவர்கள் எழுதினார்கள். எனக்கு என்னுடன் எனது வீடு பக்கத்தில் உள்ள சந்திரகலா மற்றும் எங்கள் வீட்டில் அருகிலிருப்பவர்களோடு சண்டை நடைபெறும் என்றால் சரிதான். சம்பவத்தன்று அருகில் இருந்தவர்களின் பெயரை நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவத்தை யாரெல்லாம் பார்த்தார்கள் என்று நான் புகாரில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். மருத்துவமனையில் மருத்துவரிடம் சிகிச்சைக்கு சென்றபோது எத்தனை ஆண் நபர்கள் எத்தனை பெண் நபர்கள் என்னை தாக்கினார்கள் என்று நான் குறிப்பிட்டு சொன்னேனா என்றால் சொன்னேன். எதிரிகள் ஆபாசமாக பேசும்போது அங்கு இருந்த மூன்றாம் நபர்களுக்கு அருவருக்கத்தக்கதாக இருந்ததாக நான் புகாரில் சொல்லியுள்ளேனா என்றால் என் தொண்டையில் குத்தியதால் நான் எதுவும் பேசமுடியவில்லை. எதிரிகள் பயன்படுத்திய கல்லின் அளவு குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் என் உள்ளங்கை அளவு இருக்கும் என்று போலிசாரிடம் சொன்னேன். அந்த கல்லை விசாரணைக்காக போலிசார்கள் கைப்பற்றினார்களா என்றால் நான் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்ததால் எனக்கு தெரியாது. எதிரி

சத்யா கல்லை பயன்படுத்தி என்னை தாக்கியிருந்தால் போலிசார் விசாரணைக்காக அக்கல்லை கைப்பற்றிருப்பார்கள் என்றாலும், சத்யா என்னை அடிக்கவில்லை என்பதால் தான் அக்கல்லை கைப்பற்றவில்லை என்றாலும் சரியல்ல. எதிரி குத்துக்கோலை காட்டி மிரட்டும்போது நான் பயந்துவிட்டேன் என்று போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் சொல்லவில்லை, குத்துக்கோல் என் தொண்டையில் தான் இருந்தது. நான் சொல்வது போல் எதிரி சத்யா கொலை செய்ய குத்துக்கோலை வைத்து கொலை மிரட்டல் விடுக்கவில்லை என்றால் சரியல்ல. ஆபாச வார்த்தைகளால் எதிரிகள் திட்டவில்லை என்றால் சரியல்ல. நான் அருகில் இருப்பவர்களோடு அனுசரித்து போகாமல் வீண் வம்பு செய்வேன் என்றால் சரியல்ல.

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/- xxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.